IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, VELLORE

VELLORE DISTRICT

**O.S.No. 186/2023**

Deposition of Witness of: PW1

1. Name : சம்ஷாத்
2. Husband's name: நவ்ஷாத்
3. Village :
4. Taluk :
5. Calling :
6. Age : 40

Solemnly affirmed in accordance with be provision of Act of 1873 on this day of 24.07.2026.

**குறுக்கு விசாரணை**

1. எனது சொந்த ஊர் வேலூர் ஆகும். வழக்கில் சொல்லியுள்ள விலாசத்தில் எத்தனை வருடங்களாக வசித்து வருகிறேன் என்றால் நான் சுமார் 20 வருடங்களாக வசித்து வருகிறேன். அதற்கான ஆவணங்கள் எதையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்திருக்கிறேன். என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் ஆதார் அடையாள அட்டை, குடும்ப அட்டை மற்றும் எனது குழந்தைகளின் பள்ளி அடையாள அட்டை தாக்கல் செய்திருக்கிறேன். என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் ரூபாய் 2 இலட்சம் கொடுத்தால் வீட்டை காலி செய்து கொள்வதாக வழக்கு

தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ரூபாய் 2 இலட்சத்திற்கு உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. செலுத்தியிருக்கிறேன். நான் வழக்கில் ரூ.1000/–க்கு மட்டுமே மதிப்பீடு செய்து நீதிமன்ற கட்டணமாக ரூ.30 /– மட்டுமே செலுத்தியிருக்கிறேன் என்றும் ரூபாய் 2 இலட்சத்திற்கு நீதிமன்ற கட்டணம் செலுத்தியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. வழக்குரையில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் சரிதான். ரூபாய் 2 இலட்சம் கேட்டு பரிகாரமும் நான் சொல்லிதான் வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் சரிதான். எனக்கு எழுதப்படிக்கத் தெரியுமா என்றால் தெரியாது. நான் படிக்கவில்லை. வழக்கு சொத்து எங்குள்ளது என்றால் சுபேதார் சேக் அப்துல் காதர் தெருவில் க/எ.2/1 ல் உள்ளது. மேற்படி சொத்திற்கு சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சொத்திற்கு ஐக்குபந்தி என்னவென்றால் என்னென்ன திசைகளில் யார் உள்ளார்கள் என்று தெரியாது. யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் மெகருனிசா, காதர்பாஷா, மெகபூப்பாஷா, சபானா மற்றும் அன்வர் பாஷா ஆகியோர் மீது தாக்கல் செய்திருக்கிறேன். மெகருனிசா எனக்கு என்ன உறவுமுறை என்றால் என் அக்கா ஆவார். காதர்பாஷா 1ம் பிரதிவாதியின் கணவர் ஆவார். 3 முதல் 5 பிரதிவாதிகள் யார் என்றால் எனது அக்காவின் மகன்களும் அவரது மருமகளும் ஆவார். 6 ம் பிரதிவாதி சபானாவின் சகோதரர் ஆவார். எனது தாயார் பெயர் மரியம் பீ ஆகும். தாவா சொத்து முதலில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது தாயாருக்கு சொந்தமானது ஆகும். தாவா சொத்து எனது தாயாருக்கு எப்படி

வந்தது என்றால் எனது அம்மாவின் அம்மா சொத்தாகும். எனது பாட்டிக்கு சொந்தமான சொத்து என காண்பிப்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. எனது பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள 1987 ன் பாகப்பிரிவினை பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் நினைவில்லை.

3. 1987 ல் எனது தாயாருக்கு தாவா சொத்து கிடைத்ததிலிருந்து அவரது அனுபவத்தில் இருந்து வந்தது என்றால் சரிதான். மேற்படி சொத்து மரியம் பீ க்கு சொந்தமானது என்றால் சரிதான். எனது தாயார் மரியம் பீ அவருக்கு சொந்தமான சொத்தை அவரது விருப்பத்திற்கு ஏற்ப யாருக்கு வேண்டுமானாலும் எழுதி கொடுக்கலாம் என்றால் சரிதான். அதன்படி 19.07.2007 ல் எனது தாயார் பாகப்பிரிவினையில் அவருக்கு வந்த சொத்தை எனது சகோதரி மெகருனிசாவிற்கு எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. எனக்கும் சேர்த்து தான் கொடுத்தார். நான் பணமாக வாங்கி கொள்வதாக சொன்னதால் எனது சகோதரி பெயரில் மட்டும் எழுதிக் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் தான் 1ம் பிரதிவாதி பெயரில் எழுதிக் கொடுக்கப்பட்ட தான செட்டில் மெண்ட் பத்திரம் என்றால் சரிதான். எனக்கு பணம் கொடுப்பதாக சொன்னதால் தான் 1ம் பிரதிவாதி பெயரில் மட்டும் பத்திரம் எழுதப்பட்டது. ஆனால் 1ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டபடி எனக்கு பணம் தரவில்லை. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் ,1ம்பிரதிவாதி ரூபாய் 2 இலட்சம் எனக்கு கொடுக்க வேண்டும் என்ற வாசகம் ஏதும் குறிப்பிடவில்லை என்றால் இல்லை. என்னை ஏமாற்றிவிட்டார்கள்.

நீதிமன்றத்தில் பதிவு செய்திருக்கிறேன். மேற்படி வா.சா.ஆ.1 பத்திரத்தில் நான் 3ம் சாட்சியாக கைரேகை வைத்திருக்கிறேன் என்றால் நான் கைரேகை வைத்தது உண்மைதான்.

4. செட்டில்மெண்ட் பத்திரம் முன்னிலைக்கு மெகருனிசா தான் சுவாதீனத்தில் இருந்தார் என்றால் இல்லை. எனது தாயார் பத்திரத்தை ஒப்படைக்கும் முன்பு 1ம்பிரதிவாதி எனக்கு காசு கொடுத்தவுடன் வீட்டை காலிசெய்யும்படி என்னிடம் கூறினார். நான் தான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகிறேன். 1ம் பிரதிவாதி எனக்கு இன்னும் காசு கொடுக்கவில்லை. எனது தாயார் எழுத்து மூலமாக மேற்சொன்னபடி எழுதிக் கொடுத்தாரா என்றால் இல்லை. மெகபு பீ என்பவர் எனது இளைய சகோதரி ஆவார். மேற்படி மெகபு பீ, தான செட்டில் மெண்ட் பத்திரத்தில் 2வதாக சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 பத்திரம் எழுதியபோது அக்கா பெயரில் மட்டும் பத்திரம் எழுதுவதற்கு நான் ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். மெகருனிசா அவரது மாமியார் வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனது தாயார் உயிரோடு இருக்கிறார். 1ம் பிரதிவாதி அவரது மாமியார் வீட்டில் வசிப்பதால் எனது தாயாரை உடனிருந்து கவனித்து கொள்வதற்காக நான் 1ம் பிரதிவாதியிடம் அனுமதி கேட்டேன் என்றாலும் 1ம் பிரதிவாதியின் அனுமதி பெற்று தான் தாவா வீட்டில் நான் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. என் மீதுள்ள பாசத்தினால் 1ம் பிரதிவாதி எனது தாயாருடன் தாவா வீட்டில் தங்க என்னை அனுமதித்தார் என்றால் தாவா வீடுள்ள தெருவில் தான் நானும் வசித்து வந்தேன். எனது தாயாருக்கு அவ்வப்போது உணவு

கொடுத்துவிட்டு அவருடன் இருந்துவிட்டு மாலையில் வீடு செல்வேன். பங்கு பிரித்தபோது தான் தாவா வீட்டில் என்னை இருக்க அனுமதித்தார்கள். தற்போது தாவா வீட்டில் எனது தாயாரை கவனித்துக் கொண்டு தங்கி வருகிறேன்.

5. மேற்கூரியபடி எழுத்துமூலமான ஆவணம் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் எனது அக்காவும் அவரது கணவரும் எழுதி கையொப்பம் செய்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். எனது தாயாரை நான் நல்லபடியாக கவனிக்காத காரணத்தினால் தான் என்னை தாவா வீட்டில் இருந்து 1ம் பிரதிவாதி காலி செய்ய சொன்னார் என்றால் சரியல்ல. அதனால் தான் வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் பத்திரத்தை இரத்து செய்து அனைவருக்கும் பங்கு கொடுக்கும் படி எனது தாயாரிடம் சண்டையிட்டேன் என்றால் இல்லை. நான் காலி செய்யாத காரணத்தினால் தான் 1ம் பிரதிவாதி 20.07.2019 அன்று ஜமாத்தில் புகார் அளித்தார் என்றால் சரிதான். ஜமாத்தில் இருந்து என்னை அழைத்தபோது நான் விசாரணைக்கு ஆஜராகவில்லை என்றால் சரியல்ல. ஆண்களை தான் ஜமாத்தில் அழைத்திருந்தார்கள். அங்கு நடைபெற்ற விசாரணையில் எனக்கு கொடுக்கவேண்டிய பணத்தை கொடுத்துவிடும்படி கூறினார்கள். இருப்பினும் 1ம் பிரதிவாதி பணத்தை கொடுக்கவில்லை. ஜமாத்தில் வீட்டை காலி செய்யக் கோரி மட்டுமே புகார் அளித்தார்கள் என்றும் ரூபாய் 2 இலட்சம் குறித்து அங்கு பேசவில்லை என்றும் 3 மாத காலத்திற்குள் வீட்டை காலி செய்துவிடுவதாக எனது கணவர் ஜமாத்தில் எழுதி கொடுத்துள்ளார் என்றும் அதன்பிறகும் நான் வீட்டை காலி

செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது பங்கிற்குரிய பணத்தை கொடுக்காததால் நான் காலி செய்யவில்லை. 21.11.2019 அன்று 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி பெயரில் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். 09.06.2020 அன்று மரியம் பீ, மெகருனிசா மற்றும் காதர்பாட்ஷா ஆகியோருக்கு வா.சா.ஆ.1 மற்றும் 21.11.2019 ஆகிய தேதிகளில் எழுதிக் கொடுக்கப்பட்ட தான செட்டில் மெண்ட் பத்திரம் செல்லாது என வழக்கு தொடரப்படும் என்று எனது வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 09.06.2020 தேதியிட்ட அறிவிப்பு நான் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பு **பி.வா.சா.ஆ.1** ஆகும். அதற்கு தாயார் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் தெரியாது.

**கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down and dictated by me to the typist in open court. Read over/interpreted to the witness understood and acknowledged by him / her to be correct.

C JAYAPRADHA
Digitally signed by C JAYAPRADHA
Date: 2026.07.24 17:30:10 +0530

Additional District Munsif,Vellore.